பொருள்களுக்குப் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. மாநில அரசின்
1970 ஏப்ரல் 2]

சொத்துக்களுக்கும் அதுபோல குறிகளைப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெயர் போடப்பட்டவைகள் மத்திய அரசாங்க சொத்து என்றால் பெயர் போடப்படாதவைகள் மாநிலத்தவை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, ஸ்டீல் ரோலிங் மில்லினுடைய அதிபர் யார் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விநாயகர் உருக்கு உருளை ஆலை என்று இருக்கிறது, யார் என்று தெரியவில்லை.
with your permission,I Want, to put qustion Sir. இந்த விநாயகர் உருக்குத் தொழிற்சாலைக்கு

திரு. கே. விநயகம் :
கே. விநயகம், எம்.எல்.ஏ. அதிபர் அல்ல என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப்பற்றி ஆராய வேண்டும்.

Leper prisoners

*645 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether separate provision has been made in jails in the State for keeping leper prisoners; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு சிறையிலும் தொழுநோய்க் கைதிகளுக்கென தனித் தொகுதிகள் அல்லது அறைகள் உள்ளன. ஒரு மாதத்திற்குட்பட்ட சிறைத் தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள், அவர்கள் அனுப்பப்படும் சிறையில் மற்ற கைதிகளினின்று தனித்து வைக்கப் பெறுவர். ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் சிறைத்தண்டனை பெற்ற தொழுநோய்க் கைதிகள் வேலூரிலுள்ள மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு அத்துடன் இணைக்கப்பட்டுள்ள தொழுநோயினர்க்கான கட்டிடப் பிரிவில் வைக்கப்படுவர்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இம்மாதிரி தொழுநோய்க்கு ஆளான கைதிகளைத் தனியாக வைத்து மனிதாபிமானத்தின் பேரில் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அரசாங்கம் எப்போதும் மனிதாபிமானத்தோடு நடந்துகொள்கிற அரசாங்கம்தான்.

திரு. எம். எஸ். மணி: தொழுநோய் உள்ள கைதிகளைச் சிறைச் சாலையில் வைப்பதற்குப் பதிலாக தொழுநோய் பற்றிக்கொண்டவர் களுக்காக உள்ள தனி விடுதியில் வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது சிறைச்சாலையிலே அவர்களுக்குத் தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கோயம்புத்தூர் மத்திய சிறையில் குடிநீர்ப் பற்றுக்குறை.

*** 646 வினா—திரு. எம். பூபதி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மத்திய சிறையில் கோடை காலங்களில் குடிநீர் பற்றுக்குறை ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்டு வருவதைச் சமாளிக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோவை மத்திய சிறைக்குத் தேவைப்படும் தண்ணீரை நகராட்சி வழங்கும் தண்ணீர் குழாய் மூலம் பெறுவதோடு அல்லாமல் லாரிகள் மூலமும் பெறப்படுகிறது. மேலும், தண்ணீர் வசதியை அதிகப்படுத்துவதற்காக நான்கு அதிகப்படியான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டில் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு வருகின்றன. மேலும் தோட்ட வேலைகளுக்குப் பயன்பட்டு வந்த குழாய்க் கிணறு ஒன்றும் கைதிகள் உபயோகத்திற்காக திருப்பப் பட்டிருக்கிறது. இந்த சிறையில் மற்றவிடங்களில் அதிகப்படியான குழாய்க் கிணறுகள் வைப்பதுபற்றியும் தற்போது இருந்து வரும் நகராட்சி தண்ணீர் வழங்கும் நெருக் குழாய்க்கு பதில் பெரிய குழாய் அமைப்பது பற்றியும் யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, 12 ஆண்டுகளுக்கு முன்பே கோவை மத்திய சிறையில் பெரிய குழாய் போடப்பட்டுள்ளது. வேண்டிய அளவுக்குத் தண்ணீர் விநியோகம் இல்லை. குறைவாகத் தான் இருக்கிறது என்று அதிகாரிகள் பலமுறைகள் ரிப்போர்ட் செய்திருந்தும் இன்னும் போதுமான அளவுக்குத் தண்ணீர் சப்ளை செய்யவில்லையென்பதை அரசாங்கம் அறியுமா? வேண்டிய, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோவைச் சிறைச்சாலையிலே தண்ணீர் பற்றுக்குறை இருப்பது உண்மை. அதைப் போக்கு வதற்குத்தான் அந்த முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு இருக்கின்றன.